DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC.238/2019
**Depositions of PW7 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரசேகர் | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13rd Day of March 2025

Signature of Witness.

**13.03.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

சம்பவ சமயத்தில் முத்துராமன் இறப்பிற்கு காரணமான லாரியை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி தான். அவரது பெயர் சரவணக்குமார் ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

உண்மையில் சம்பவ சமயத்தில் நான் எனது காரில் சாட்சி பிச்சைபாண்டி என்பவருடன் பயணம் செய்திருந்தால் எனது காரின் எண்ணை போலீசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு இருப்பேன் என்றும், நான் அவ்வாறு செல்லாத காரணத்தினால் தான் மேற்படி விபரத்தை கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லாததால் தான் எந்த இடத்தில் சம்பவமானது நடந்தது என்று முதல் விசாரணையில் கூறவில்லை என்றால்

சரியல்ல. (நீதிமன்ற கேள்வி - எங்கு விபத்தானது நடந்தது என்றால் எரிச்சநத்தம் பகுதியை தாண்டி சர்ச் அருகே நடந்தது). விபத்தில் இறந்த நபரும், காயம்பட்ட நபர் எனது உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் சம்பவ சமயத்தில் எதிரியை பார்த்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தின் தகவல் தெரிந்து கொண்டு நான் மருத்துவமனைக்கு சென்று தான் எதிரியின் பெயரை தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC.238/2019
**Depositions of PW8 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | பிச்சைபாண்டி | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13rd Day of March 2025

Signature of Witness.

**13.03.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பேரையூர், சூலபுரத்தில் குடியிருந்து வருகிறேன். திருப்பூரில் பனியன் கம்பெனி வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். வழக்கில் இறந்து போன முத்துராமன் என்பவரை தெரியும். வழக்கில் காயம்பட்ட செந்தில்குமாரை தெரியும். கடந்த 28.01.2019 ம் தேதி மைத்துனர் மணிகண்டனின் மைத்துனர் சோலைமலை சிவகாசியில் இறந்துவிட்டதால், இறப்பு நிகழ்ச்சிற்காக நானும், சந்திரசேகர் ஆகிய இருவரும் வந்திருந்தோம். பெத்துமணி, ராஜா, முத்துராமன், செந்தில்குமார் ஆகியோர் வந்திருந்தார்கள். மறுநாள் 29.01.2019 ம் தேதி எங்கள் ஊருக்கு திரும்ப சென்று கொண்டிருந்த போது காலை 09.00 மணிக்கு மேல் எரிச்சநத்தத்தை தாண்டி ஒரு கோவில் அருகே குறுகலான பாதையில் சென்று கொண்டிருந்த போது எங்களுக்கு முன்னால் முத்துராமனும், செந்தில்குமாரும் ஒரு

வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த ஈச்சர் லாரி வேகமாக வந்து இடதுபுறமாக சென்ற முத்துராமன் வாகனத்தின் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டு இருவரும் கீழே விழுந்துவிட்டார்கள். பின்னர் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்லி வந்து பார்த்த போது முத்துராமன் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினார்கள். காயம்பட்ட செந்தில்குமாரை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இறந்து போன முத்துராமன் உடலை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள். ஆஜர் எதிரி தான் சம்பவ சமயத்தில் ஈச்சர் லாரியை ஓட்டி வந்து முத்துராமன் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் இறந்த நபரும், காயம்பட்ட நபரும் எனது உறவினர் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது கோவில் அருகே என்றால் சரிதான். (நீதிமன்ற கேள்வி என்ன கோவில் அருகே என்றால் சர்ச் ஆகும்). சம்பவ சமயத்தில் நான் பயணித்தாக சொல்லப்படும் பாதையானது இரண்டு பக்கம் மண் பாதை மற்றும் தார் பாதையானது குறுகிய பாதை என்றால் சரிதான். அதனால் ஒரு வாகனத்தை முந்தி மற்ற வாகனம் செல்ல முடியாது என்றால் சரிதான். காரை யார் இயக்கி வந்தார் என்றால் சந்திரசேகர் இயக்கினார். உண்மையில் சம்பவ சமயத்தில் நான் காரில் சாட்சி சந்திரசேகர் என்பவருடன் பயணம் செய்திருந்தால் காரின் எண்ணை போலீசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு

இருப்பேன் என்றும், நான் அவ்வாறு செல்லாத காரணத்தினால் தான் மேற்படி விபரத்தை கூறவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், சம்பவ இடத்தை குறித்து கேள்விபட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபரும், காயம்பட்ட நபர் எனது உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் சம்பவ சமயத்தில் எதிரியை பார்த்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தின் தகவல் தெரிந்து கொண்டு நான் மருத்துவமனைக்கு சென்று தான் எதிரியின் பெயரை தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. வழக்கின் எதிரி அதிவேகமாக சென்றததால் தான் விபத்து ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.